Regd. No. M. 4900. 8-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-1-0.

# குடி அரசு

ESTD. 1924

வருட சந்தா: உள்நாடு ரூ. 4-0-0. வெளிநாடு ரூ. 6-0-0.

மாலை 21 } ஈரோடு 15-11-1947 சனிக்கிழமை { மலர் 10.

## தமிழாசிரியர் துக்கநாள்.

★

தமிழாசிரியர்கள் இம்மாதம் 10ம்நாள் முதல் 16ம்நாள்வரை துக்க நாளாகக் கொண்டாட ஏற்பாடுசெய்து, கொண்டாடி வருகின்றனர் என்று அறிகின்றோம். துக்கநாள் கொண்டாடுவதின் நோக்கம், தமிழாசிரியர்களின் குறைகளை—குறிப்பாகச் சம்பளத்தை உயர்த்தவேண்டுமென்பதைக் கல்வியமைச்சருக்குத் தெரிவித்துக்கொள்வதாகும் என்றும், கோஷித்த தெரிவிப்பு பயன்படாது போகுமானால், துன்ப நிலையிலிருந்து மீளுவதைக் குறித்து நடத்தும் பெருங் கிளர்ச்சியில் மாளுவது என்ற முடிவிற்கு வந்துவிடுவதாகும் என்றும் சொல்லப்படுகின்றது.

நாடு சுதந்திரமடைந்து விட்டது என்று சொல்லப்படுகின்ற நிலையில், நாட்டு மக்களின் மொழியறிவை வளர்த்துத் தம்மையும் வளர்த்து வரவேண்டிய தாய் மொழி ஆசிரியர்கள்—தமிழாசிரியர்கள் துக்கநாள் கொண்டாடவேண்டிய நிலை ஏன் ஏற்பட்டது? ஆங்கில மொழியையும் பிற பாடங்களையும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குக் காலத்திற்கு ஏற்றாற்போல, ஓரளவு ஊதியங்களை உயர்த்திக்கொடுக்கின்ற நிலையில் தாய்மொழியைப் பயிற்றும் ஆசிரியர்களுக்கு மட்டும் அவ்வாறு செய்யப்படாதது ஏன்? மனிதனின் அத்யாவசியமான தேவைப் பொருள்கள் எல்லாம், ஒன்றுக்கு 3 மடங்கு 4 மடங்கு என்று விலையுயர்ந்து, விலையுயர்ந்த நிலைக்கு ஏற்ப வெவ்வேறு துறைகளில் உள்ளவர்களின் வருவாயும் உயர்ந்திருக்கும்போது,—விரிவடைந்திருக்கும்போது தமிழாசிரியர்களின் ஊதியமட்டும், "அன்றிருந்த மேனிக்கு அழிவில்லை" என்று சொல்லும்படி ஏன் இருக்கவேண்டும்? உணர்ச்சியும் பகுத்தறிவும் தன்மையும் நிறைந்த தமிழாசிரியர்கள் இதனை எண்ணிப் பார்த்தல்வேண்டும்.

ஒரு நாட்டின் மக்களது அறிவை விரிவடையச் செய்து, மக்களுக்குத் தேவையான தொழில் துறைகளைப் பெருக்கி, மக்களது வாழ்வை இன்ப வாழ்வாக ஆக்கவேண்டியது, அந்தந்த நாட்டிலுள்ள அறிஞர்களின்—சிந்தனையாளர்களின் கடமையும் பொறுப்புமாகும். தமிழ் நாட்டின் அறிஞர்களான, புலவர்களான, பண்டிதர்களான, தமிழாசிரியர்கள் இக்கடமையையும் பொறுப்பையும் எவ்வளவு உணர்ந்தார்கள்? எந்த அளவு செய்திருக்கின்றார்கள்? என்றால், கடமையை யுணர்ந்து காரியமாற்றவில்லை என்பது மட்டுமல்ல, மக்களது அறிவை மழுங்கச் செய்து, மக்கள் தங்களின் வாழ்க்கையையே ஒரு பாரமாகக் கருதுமளவுக்கு பாடுபடவேண்டியவர்களாகி விட்டார்கள், பாடுபட்டு வந்திருக்கின்றார்கள் என்றே கூறவேண்டியதாயிருக்கின்றது. இதை இப்போதைய நாட்டின் நிலைமையே விளக்கும்—ஏன்—தமிழாசிரியர்களின் தாழ் நிலைமைக்குக் காரணமே அதுதான். இந்த உண்மையைத் தமிழாசிரியர்களுக்குள்ளே உணர்ந்தவர் மிகச் சிலரே, ஆனால் உணர்ந்த நிலையில் மாற்றியமைக்க வேண்டிய பொறுப்பை மேற்கொள்பவர் ஒரு சிலர் கூட இல்லை.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற பேச்சு—கருத்து—பல ஆயிரமாண்டுகளுக்கு முன்னமேயே தோன்றியிருந்தும், அந்த எண்ணம் நம் நாட்டில் இதுவரை வேரூன்றவில்லை. வேரூன்ற வேண்டியதற்குப் பாடுபட வேண்டிய அறிஞர்கள் யாரோ அவர்கள் பாடுபடவில்லை. மாறாக, மத வெறியும் ஜாதி வெறியும் மக்களிடையே வளர்ந்து கொண்டே வந்திருக்கின்றன.

இயற்கைப் பொருள்களை ஒவ்வொரு முனையிலிருந்தும் நின்று சிந்திக்கும் பழக்கம் மிகப் பலரால் முன்பு வளர்க்கப்பட்டிருந்தும் கூட, பிறகு நம் நாட்டு அறிஞர்கள் என்பவர்கள் அப்பழக்கத்தை அறவே கைவிடவேண்டியவர்களாகி விட்டார்கள். அதுமட்டுமல்ல, உலகப்பொருள்களை எண்ணுவதும் அதன் கூறுபாடுகளைச் சிந்திப்பதும் இழிவானவையாகும் என்ற முடிவிற்கு வந்து, மக்களைக் குறித்துப் பேசுவதும் பாடுவதும் மடமையானதாகும் என்றும், மகாதேவனைக் குறித்துக் காவியங்கள் செய்வதே முறையானதும் புண்ணியமானதுமாகும் என்றும் முடிவு ஏற்பட்டு அந்த முடிவே பல ஆயிரம் ஆண்டுகளாக ஆட்சிசெய்தும் வந்திருக்கின்றது.

சூரியனுடைய சுழற்சியைக் குறித்தும் அச்சுழற்சியின் பல்வேறு பயன் குறித்தும், காணுகின்ற பழக்கம் ஒருசிலரால் பல ஆயிரமாண்டுகளுக்கு முன்னாலேயே தொடக்கப்பட்டிருந்தும், அத்துறையில், பிறகு தோன்றிய நம்நாட்டு அறிஞர்கள் என்பவர்களின் கவனம் செல்லவில்லை. செல்லாதது மட்டுமல்ல, அதற்கு மாறான—பொய்ம் மலிந்த—கூற்றுகளைச், சொல்வதற்கு எளிதாக இருக்கும் காரணத்தாற்போலும் கூறப்பட்டு வளர்க்கப்பட்டு வந்திருக்கின்றது.

அரசியல் துறையிலே அறிஞர்களுக்கு முழுப்பங்குண்டு என்ற உரிமையையுணர்ந்து, நாட்டு மக்களின் நலத்திற்கான வகையில், வளைந்த கோல்களை நிமிர்த்திவைக்கும் முயற்சியையும்கூடச் சிலர் முன்பு பேணி வந்திருக்க, அந்த முறையழிந்து, ஆளுவோரை ஆண்டவனாக உயர்த்திப் போற்றி, ஆளப்படுவோரின் தலைவிதியே அந்தந்த நாட்டுக்கும் அரசன் அமைவது என்ற கருத்து வற்புறுத்தப்பட்டு ஆளுவோரின் ஆதிக்கம் வலுக்கவே [illegible]ளிக்கப்பட்டு வந்திருக்கின்றது.

பல்வேறு நாட்டு மக்கள் புதிது புதிதாக நம் நாட்டில் குடியேறி வர, அவர்களின் கூட்டுறவால் ஏற்படும் சாதக பாதகங்களை எண்ணிப்பார்த்து, பாதகமின்றி நாட்டு மக்கள் வாழுவதற்குப்

பாதை அமைக்க வேண்டிய அறிஞர்கள் என்பவர்கள், அந்த முயற்சியில் நாம் பலியாகி விடுவோமோ? என்ற எண்ணத்தாலோ என்னமோ ஒதுங்கியே வாழ்ந்து வந்திருக்கின்றனர். சிலர் தலையிட்டிருந்துங்கூட, அந்தத் தலையீடு பயனில்லாமல் போய்விட்டது. ஒரு சில அறிஞர்களின் எதிர்ப்புப் பயனில்லாமல் போய்விடவே, வந்து குடியேறியவர்களின் இல்லாத பெருமையையுயர்த்திப் பேசி, வாழ்ந்து ஆண்டு வந்தவர்களின் உண்மைப் பெருமையைச் சிறுமைப்படுத்துவதே, தங்களுக்குப் பெரும் பயனைத் தருகின்றது என்று நம்பி மிகப் பல அறிஞர் என்பவர்களால் வளர்க்கப்பட்டு வந்திருக்கின்றது.

நீதியும் நேர்மையுமே வீரம் என்று இலக்கணம் கூறி இலக்கியங்களைக் காட்டிய அறிஞர்கள் மறைந்து, அநீதியும் அக்கிரமமுமே வீரம் என்று புகழ்ந்துகூற வேண்டிய அறிஞர்கள் பிறகு தோன்றி அக்கருத்தை வற்புறுத்தித் தாங்களும் வளர்ந்துவரலானார்கள்.

எண்ணுவது போல எதுவும் நடக்கும்; எண்ணத்தில் மட்டும் திடம் வேண்டும் என்று கூறிய அறிஞர்கள் மறைந்து, 'எண்ணுவதெல்லாம நடந்தால் ஈசன் ஒப்பேது'' என்ற கருத்தை வற்புறுத்தி அந்நிலையில் அறிஞர்கள் என்பவர்கள் தாங்களும் வளர்ந்து வரலாயினர்.

அறத்தை விலைகூறாத வள்ளல்களைக்காட்டி பெருமையடைந்த அறிஞர்கூட்டம், அறத்தைவிற்கும் கூட்டத்திற்கு விளம்பர அதிகாரிகளாகப் பிறகு மாறிவிட்டார்கள்.

தொழிலின் பெருமையை யுயர்த்திப் பேசித் தொழிலாளர்களைப் பாராட்டி வரவேண்டும் என்ற அறிஞர் ஏற்பாடு மறைந்து, தொழிலாளர்கள் பாவப் பிறவிகள் எனவும் தொழிலாளர்கள் நிலைமை உழைத்துச் சாகவேண்டியதுதான் எனவும் எண்ணுகிற அறிஞர்கள் என்பவர்கள் பிறகு நிறைந்துவிட்டார்கள்.

நல்ல செயல் என்று நாம் கண்ட ஒன்றிற்குப் பாடுபட்டு வெற்றியடைவோம். அல்லது அந்த முயற்சியில் இறப்பை யடைவோம் என்று எண்ணியமக்கள் மறைந்து, வெந்ததைத்தின்று விதிவந்தால் சாவோம் என்ற நிலையைக் கொண்ட மக்கள் பெருகுமாறு தாலாட்டுப் பருவந்தொடங்கி வளர்க்கப்பட வெகுகாலமாக அறிஞர்கள் என்பவர்கள் பாடுபட்டு வந்திருக்கின்றனர்.

இந்த நெறியிற் சென்ற அறிஞர்கள் என்பவர்கள் தங்களுக்குப் பின்னால்வரும் அறிஞர்கள் என்பவர்களும் இப்போக்கிலிருந்து வழுவிவிடக்கூடாது என்ற அடிப்படையில் கட்டியிருக்கும் பாதையில் நடந்தவர்களே இக்காலத் தமிழாசிரியர்கள் என்பதை முதலில் தமிழாசிரியர்கள் என்பவர்கள் உணரவேண்டும். உண்மை கசப்பாக இருக்கலாம். அதற்காக உண்மையை ஒப்புக்கொள்ளாதது அறிவுடைமைக்கு அழகல்ல.

இப்போக்கினைத் தமிழாசிரியர்களின் பரம்பரை கொண்டிருந்தது என்று கூறுவது, குறைகூற வேண்டுமென்ற நோக்கத்தோடல்ல. குறையை யுணர்ந்தால்தான் குறைகளை அகற்றமுடியும் என்ற உறுதியினாலேயே இவைகளை எடுத்துக் காட்ட நேர்ந்தது.

அறிவையும் ஆற்றலையும் பெருக்கி, செல்வத்தையும் செழிப்பையும் வளர்க்க வேண்டிய பொறுப்பினையுடைய ஆசிரியர்கள், காலவேறுபாடுகளால்—குறிப்பாக ஆரியக் கூட்டுறவினால் ''வாழ்வாவது மாயம்' என்ற போக்கை வளர்த்து, வாழ்க்கையில் ஆணுக்கும் பெண்ணிற்கும் வேறுபாட்டை வளர்த்து, ஆண் பெண் கூட்டுறவான சமுதாயத்தின் வலுவை யழிக்கும் பற்பல வழிகளைப் பெருக்கியதாலேயே, நாட்டு மக்களுக்கு மொழிப்பற்றும், நாட்டுப்பற்றும், இனப்பற்றும் அறவே இல்லாமற் போய், ''பற்றற்ற நிலையே பரமபதம் தரும்'' என்று வெளியிற் கூறித் தங்களையும் மற்றவர்களையும் ஏமாற்றிக் கொண்டு, சாதிப்பற்றும், பிறர் வாழ்வைக்கண்டு பொறாமைப்படும் சிறுமைக்குணமும் பெருகி, எப்பொழுது மற்றவன் ஏமாறுவான்; நாம் எந்த வகையில் அவன் பொருளைச் சுரண்டிக் கொள்ளலாம் என்ற நிலைமை ஏற்பட்டு, தன் மரியாதையையும் இழந்து வாழும் மக்கள் நிறைந்ததினாலேயே இன்று தமிழாசிரியர்கள் நிலைமை கேட்பாரற்ற கேடுகெட்ட நிலையாய் இருக்கின்றது. இதனை யுணர்ந்து, இக்குறைகள் நீங்க என்றைக்குத் தமிழாசிரியர்கள் திட்டமிட்டு வேலை செய்கின்றார்களோ, அன்றுதான் துக்கநாள் கொண்டாடவேண்டிய நிலை ஏற்படாது என்பதும், அதுவரை இந்த நிலைமைதான் நீடிக்கும் என்பதும், குறைகள் நீங்கத் திட்டமிடாமல் போடும் கூக்குரலால், சுயநல வாதிகளான சிலர் சுகமடையவே வழிபிறக்கும்; அனைவருக்கும் பயன்படாது என்பதும், உண்மையாகும் என்பதை அறிவும் சிந்தனையுமுடையவர்கள் கண்டு கொள்ளலாம்.

நாடு விடுதலை பெற்றதென்றால், மொழி விடுதலை பெற்று விட்டது என்பது பொருள். ஆனால் மொழி விடுதலை பெற்றதா? மொழி ஆசிரியர்கள் விடுதலை பெற்றார்களா? அடிமை இந்தியா என்று சொல்லப்பட்ட நாட்டிலேகூட, சுதந்தர இந்தியா என்று சொல்லப்படும் நாட்டில் தமிழாசிரியர்கள் பழித்துப் பேசப்பட்டுமளவிற்குப் பழித்துப் பேசப்படவில்லை. கனம் கல்வி மந்திரியே, ''மின்சார விளக்குப் பொத்தானை அழுத்தத் தெரியாதவர்கள் என்றும், பொதிசுமந்த கழுதைகள்'' என்றும், வாய் கூசாமல் சொல்லி விட்டார். அவரை அவ்வாறு கூற வைத்துக்கேட்டிருந்தவர்களும், இவ்வாறு கூறலாமா? இது முறையா? என்று கேட்கத் துணிந்த இளைஞர்களை அடக்கியவர்களும் யார்? தமிழாசிரியர்கள் பெயரைச் சொல்லி தங்கள் வாழ்வு வளம் நிறைந்ததாய்இருந்தாற்போதும் என்றெண்ணும், சில சுயநலத்தலைவர்களே என்பதை முதலில் தமிழாசிரியர்கள் உணர்ந்து இத்தகைய தலைவர்கள் பயன்படமாட்டார்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டுகின்றோம்.

இன்றுள்ள தமிழாசிரியர்களிற் பலர், அதுவும்,திராவிடர்கழகப் பிரச்சாரத்தின் பயனாக பத்து பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின் படித்து வெளியேறியவர்கள், அறிவொளியைத் தாங்கி அஞ்ஞானக் காட்டைக் கடந்தவர்களாயிருப்பதே தமிழாசிரியர் நிலை தாழ்ந்தே இருப்பதற்கு ஒரு காரணமாகும். அறியாமைக்கு மதிப்பு என்ற நாட்டில் அறிவிற்கு மதிப்பு இருக்க முடியுமா? கோவணங் கட்டாத ஊரில் அதைக் கட்டியவன் பைத்தியக்காரன்தானே.

தமிழாசிரியர்களிற் பெரும்பாலோர் தமிழர்களாய்—திராவிடர்களாய் இருப்பது, அதாவது தமிழன் என்ற உணர்ச்சியோடும் திராவிடன் என்ற உணர்ச்சியோடுமிருப்பது மற்றொரு காரணம். ஆரிய ஆட்சியில்—மனுதரும வருணாச்சிரம ஆட்சியில் இந்த உணர்ச்சி இருப்பது எவ்வாறு அங்கீகரிக்கப்படும்?

இவைதான் தமிழாசிரியர்கள் நிலைமை கவனிக்கப்படாமல் இருப்பதற்குரிய காரணங்களாக இருக்கமுடியுமே தவிர, வேறு தனிக்காரணம் ஒன்றும் இருக்கமுடியாது என்று நாம் உறுதியாய் நம்புகின்றோம். இதனாலேயே இயற்கையாகவே நாம் தமிழாசிரியர்கள் பால் அன்போடு, அவர்கள் இழிவுபட்ட நிலையில் நடத்தப்படுவதற்குப் பெரிதும் கவலை கொள்ளுகின்றோம்.

பயனைப் பொறுத்தவளவில் தமிழாசிரியர்கள், பிற ஆசிரியர்கள் ஆகிய இருவரையும் சேர்த்து எண்ணும்போது, பிற ஆசிரியர்களைக் காட்டிலும் தமிழாசிரியர்களே பெரிதும் மாணவர்களுக்குப் பயன்பட்டு வருகின்றார்கள் என்பது நம் எண்ணம்.

ஆங்கிலம் ஒன்றையே கற்கும் ஆசிரியர்கள், அறிவு விளக்கமடைவதற்குச் சாதனமெனப்படும் தற்காலக் கல்வி முறையை யொட்டிப், பெரும்பொருள் செலவுசெய்து கற்கின்றார்கள் என்பதும், தமிழ் ஒன்றையே கற்கும் ஆசிரியர்கள் அறிவு மழுங்குவதற்குச் சாதனமான, அறிவுக்கொவ்வாத புராண இதிகாசங்

[தொடர்ச்சி 8ம் பக்கம்]

# ★ காந்தியாரா எதிர்த்தார்? ★

★

காந்தியார் கலப்பு மணத்தையும் சமபந்தி போஜனத்தையும், கோயில் நுழைவையும் எதிர்த்தார் என்று பெரியார் அவர்கள் கோபிச்செட்டிபாளையத்திலே பேசியிருக்கிறாரே. இது உண்மையா? காந்தியார் ஒருபொழுதும் இவற்றை எதிர்த்ததில்லையே ஏன் இந்த அபாண்டம்? என்று மறுக்கிறார்களாம், நமது காங்கிரஸ் திராவிடத்தோழர்கள் சிலர். வாடிப்பட்டியிலுள்ள நம் ஏஜண்ட் இதற்கு விளக்கங்கூற வேண்டுமென்கின்றார்.

கா. திராவிடத்தோழர்களின் இச்செய்கையை நாம் வரவேற்கின்றோம். இன்னும் எத்தனையோ கா. தோழர்கள் டி பேச்சைப் படித்திருப்பார்கள். ஆனால் என்ன எண்ணியிருப்பார்கள். "எங்கள் மகாத்மாவா இவற்றை எதிர்த்தார்? பலநாடுகளுக்குச் சென்று பல நாட்டு மக்களோடு பழகிய எங்கள் மகாத்மாவா சமபந்தி போஜனத்தை எதிர்த்தார்? தன் மகனுக்கே தமிழ்நாட்டு ஆச்சாரியாரின் மகளைக்கொண்ட காந்தியா, கலப்புமணத்தை எதிர்த்தார்? கோவிலை விபசாரவிடுதி என்றுகூறி, உருவவழிபாடு செய்வதை விரும்பாத எமது குருதேவரா, கோயில் நுழைவைக் கண்டித்தார்? இதென்ன அக்கிரமம்! இப்படியும் ஒரு மாபெரும் பொய்யை—பழியை—மகாத்மாவின் மீது சுமத்துவதற்கு எப்படித்தான் மனம் வந்ததோ? இவ்வாறு அபியாயமாகப் பழிசுமத்துகின்ற ஒருவரை எங்கள் கவர்ன்மெண்டார் இருப்பதால்தானே வெறுமனே விட்டிருக்கின்றார்கள்" என்றெல்லாம் எண்ணியிருக்கலாம் ஏன் நம் வாடிப்பட்டிக் காங்கிரஸ் திராவிடத் தோழர்கள் கூட இவ்வாறு எண்ணியிருக்கலாம்.

காந்தியாரின் கபடநாடகத்தையும், ஒரு சொல்லுக்கே பல பொருள்கூறி மயங்கவைப்பதையும், வழக்கின் இடங்களில் அந்தராத்மாவின் ஆதரவைப் பிடிப்பதையும், வருணாச்சிரமத்தின் பாதுகாவலரே காந்தியார் என்பதையும் சு. ம. இயக்கமும், திராவிடர் கழகமும் அப்போதைக்கப்போது அம்பலப்படுத்தி வந்திருக்கின்றன. ஆனால் அறிந்தவர்கள் எத்தனைபேர்? உண்மையையறிந்து கொள்ளவேண்டுமெனக் கவலைப்பட்டவர்கள் எத்தனை பேர்?

கலப்பு மணத்தைக் குறித்தும் சமபந்தி போஜனத்தைக் குறித்தும் மகாத்மா என்ற பேராத்மாவின் கருத்தைக் கீழே குறிப்பிடுகின்றோம்.

"சமபந்தி போஜனமும் கலப்பு மணமும் தேசிய ஒற்றுமைக்குத் தேவையில்லை என்று நான் நம்புகின்றேன். சமபந்தி போஜனத்தால் நட்பு உண்டாக்கப்படுகின்றது என்பது என் அனுபவத்திற்கு மாறானது. இது உண்மையானால் (சமபந்தி போஜனம் ஒற்றுமையையுண்டுபண்ணுவதுண்மையானால்) ஐரோப்பாவில் சண்டையே ஏற்பட்டிராதே. உணவுண்பது என்பது மல ஜலங்கழிப்பது போல ஒரு அசிங்கமான செயலேயாகும். உணவுண்பதற்கும் மல ஜலங்கழிப்பதற்கும் என்ன வேறுபாடு என்றால், உணவுண்டபின் ஏற்படும் ஒருவகை அசௌகரியமும், மல ஜலங்கழித்தபின் ஏற்படும் ஒருவகை அமைதியுணர்ச்சியுமே இரண்டிற்கும் வேறுபாடு. மல ஜலங்கழிப்பது எப்படித் தனித்தனியே செய்யப்படுகின்றதோ அதுபோல உணவுண்பதிலும் மேற்கொள்ளவேண்டும். இந்தியாவில் (இந்துக்களுக்குள்) சகோதரர்களுடைய குழந்தைகள் ஒருவரையொருவர் மணந்து கொள்ளும் பழக்கமில்லை. அவர்களிடையே மணம் இல்லாததினால் அவர்கள் ஒருவரை ஒருவர் நேசிப்பதில்லையா? வைதீக வைணவப் பெண்கள் சிலர், தம் குடும்பத்தினருடன் சேர்ந்துண்டதோ, பொதுக்குடத்திலுள்ள நீரைக் குடிப்பதோ இல்லை. அதனால் அவர்களிடையே அன்பு இல்லை என்று சொல்ல முடியுமா? வருணாச்சிரம தருமம் (ஜாதிப் பிரிவினைகள்) கலப்பு மணத்தையோ சமபந்தி போஜனத்தையோ அனுமதிக்கவில்லை என்பதற்காக, ஜாதிப் பிரிவினைகளைக் கெடுதல் எனக் கூறிவிட முடியாது"

இவை நவஜீவன் என்ற குஜராத்திப் பத்திரிகையில் 1921—22ல் காந்தியார் தம் கைப்பட எழுதியிருப்பதின் ஒரு பகுதியாகும். இதனை டாக்டர் அம்பேத்கார் அவர்கள் "தீண்டப்படாதோருக்கு காந்தியும் காங்கிரசும் சாதித்ததென்ன?" என்று ஆங்கிலத்தில் எழுதியிருக்கும் நூலில் 276ம் பக்கத்தில் கூறியிருக்கின்றார்.

கோவில் நுழைவைக் காந்தியார் எதிர்த்தார் என்பதையும் அதே நூலில் அம்பேத்கார் அவர்கள் குறிப்பிடுகின்றார். அதனிலும் விளக்கமாகத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் 1920 முதல் 24 வரையுள்ள "யங் இந்தியாவை" நமது இளந்தோழர்கள் புரட்டிப் பார்க்கவேண்டும், அக்காலங்களில் காந்தியார் பஞ்சமர்களுக்குத் தனித்தனியே கோயிலும் கிணறும் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கூறிவந்தார். காந்தியாரின் பேச்சைக் கேட்டுக்கொண்டு, பண்டித மாளவியா அவர்கள்கூட, பஞ்சமர்களுக்குத் தனிக்கோயில் தனிக்கிணறு வேண்டுமென்று கூறி வந்திருக்கின்றார். வைக்கம் சத்தியாக்கிரகத்தில் பெரியார் அவர்கள் அடைந்த பெரு வெற்றிக்குப் பிறகே, காந்தியார் தமது போக்கைச் சிறிது மாற்றிக்கொண்டு, ஏற்கனவே சூத்திரர்கள் எந்த அளவு செல்ல அனுமதியுண்டோ அந்த அளவு பஞ்சமர்களும் செல்வதை அனுமதித்தார் என்பதையும், பிராமணர்கள் கோவிலுக்குள் எங்கெங்கு நுழைகின்றார்களோ அங்கெல்லாம் சூத்திரர்களும், பஞ்சமர்களும் நுழைவதைக் குறித்து நாளது வரை காந்தியார் பேசவில்லை என்பதையும், பூஜை வைப்பது போன்ற செயல்களை, பிராமணரல்லாத மற்றவர்களும் செய்யலாம் என்பதைக் குறித்து ஒரு வார்த்தைகூட இதுவரை சொல்லவில்லை என்பதையும் நமது காங்கிரஸ் திராவிடத் தோழர்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகின்றோம்.

காங்கிரஸ் திராவிட இளைஞர்களே! காங்கிரசின் பெயரால், இன்று விளம்பரமாக ஆடம்பரமாக டாம்பீகமாக நடைபெறும் செயல்களால் ஏமாந்துவிடாதீர்கள்! எதனையும், எப்பொழுதும், யார் கூறினாலும் யாரால் கூறப்பட்டிருப்பினும் அதனுண்மையையறிந்துகொள்ள வேண்டுமென ஒரு வழக்கத்தையும், அறிந்ததை ஆராய்ந்துபார்க்கவேண்டுமென்ற வழக்கத்தையும், சிக்கல் உண்டாகும்போது மற்றவர்களோடு கலந்து பேசித் தெளிவடையவேண்டிய முயற்சியை மேற்கொள்ளும் வழக்கத்தையும், தெளிவடைந்த எண்ணங்களைச் செயலுக்குக் கொண்டுவரவேண்டுமென்ற வழக்கத்தையும், மேற்கொள்ளவேண்டுவதே மிகமிகத் தேவை என்று கூறி, அவற்றுள் முதல் வழக்கத்தைக் கடைப்பிடித்த நம் வாடிப்பட்டிக் கா. தோழர்கள் மற்றைய வழக்கங்களையும் கைக்கொள்ளத் தவறமாட்டார்கள் எனவும் நம்புகிறோம்.

---

## மறைவு

சேந்தமங்கலத்தில் திராவிடர் கழகத்தை ஏற்படுத்தியவரும், நீண்டகாலமாக அதற்காகப் பாடுபட்டவரும், குடி அரசு, திராவிடநாடு, போர்வாள் விற்பனையாளருமான தோழர் எஸ். ராமசாமி அவர்கள் 5-11-47 புதன்கிழமை இரவு $12\frac{1}{2}$ மணிக்கு திடீரெனக் காலமானார் எனவும், திராவிடர் கழகத்தின் சார்பாக அன்னார் குடும்பத்திற்கு வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம் எனவும் சேந்தமங்கலம் திராவிடர் கழகக் காரியதரிசி எழுதுகிறார்.

---

ஒரு சாதாரண மனிதன் தனது வாழ்நாளில் 65,000 மைல் நடக்கிறானாம்.

குடி அரசு

15-11-47 சனிக்கிழமை

# இது சுதந்தரமா? எது சுதந்தரம்?

★

உலகிலே அறிவுள்ள மக்கள் சுதந்தரத்துக்கு ஆகப் போராடுவார்கள். ஆனால் நம் நாட்டில் மக்களின் போர்த்தரம் எப்படி எந்தக் கருத்தின்மீது துவக்கப்பட்டது? என்று பார்ப்போமானால், போருக்கு ஆக சுதந்தரம் பெற வேண்டுமென்கின்ற கருத்தின் மீது துவக்கப்பட்டதாகவே இருந்து வருகிறது. வெள்ளையரது ஆட்சியில் முதல் முதலாக சுதந்தரம் என்பது, சிறிதும் போராட்டமில்லாமல் சுதந்தரத்துக்கு ஆகப் போர் எண்ணமே இல்லாமல் ராஜவிஸ்வாசம், ராஜ வாழ்த்து, ராஜ ஊழியப் பிரார்த்தனை ஆகியவைகளை வெள்ளையருக்குக் காட்டியதின் மூலமும் வெள்ளையர் திக்கு நோக்கிச் செய்ததின் மூலமுமே இன்றைய சுதந்தரத்திற்கு "சுதந்தரதேவி கர்ப்ப உதயமானாள்". அதாவது இந்த நாட்டு (இந்திய தேசிய) காங்கரஸ் என்பது தோன்றியதே, இராஜவிஸ்வாசம் இராஜ வாழ்த்து இராஜ சேவை என்னும் கோலாகல லீலையில் தோன்றிற்று. அடுத்தபடியாக அந்த சுதந்தரக் குழந்தை எழுந்து நின்று பேசத் தொடங்கியது, ஓடி ஆடிக் காட்டிய இராஜவாழ்த்து இராஜவிஸ்வாசத் தீர்மானத்தில் இருந்தேதான் அடுத்த சுதந்தரமான சீர்திருத்தங்கள் என்னும் தன்மையில் 2வது குழந்தை பிறந்தது. இப்படியாக இக்குழந்தைகள் பிறந்து வளர்ந்து நடந்து பேசத்தொடங்கியவுடன் போராட்டத்திற்குத் தகுதியாகி விட்டதாகக் கருதிக் கொண்டு "இறங்கிவிட்டாள் சுதந்தர தேவி" போராட்டத்தில். ஏன் போராட்டத்தில் இறங்கிவிட்டாள் என்றால், காங்கரசால் சுதந்தரம் கேட்கப்பட்ட காரணமே போராட்டத்திற்கு ஆகவே ஆனதால்தான். அதாவது இந்திய தேசிய காங்கரஸ் என்பது, போராட்டத்திற்கு ஆகவே ஏற்பட்டது என்பதாக ஏன் சொல்லுகிறோம்? இதை இப்போது மட்டும் சொல்லவில்லை. இதற்கு முன்பும் இதைப்பற்றிப் பலதடவை கூறிவந்திருக்கிறோம். அதையே இப்பொழுதும் சொல்லுகிறோம். இந்திய தேசியக் காங்கரசானது வெள்ளை நிற ஆரியனும் (பிரிட்டிஷ்காரனும்) தவுட்டுநிற ஆரியனும் (இந்திய ஆரியனாகிய பார்ப்பானும்) சேர்ந்து நடத்திய கலவியால் பிறந்த பிள்ளையேதான்" என்பதாகச் சொல்லி வந்திருக்கிறோம். அதன் முக்கிய அவசியத்தையும் அப்போதே குறிப்பிட்டிருக்கிறோம். அதாவது வடநாட்டில் உள்ள இந்திய முஸ்லிம்களை அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்தி ஒழிப்பதற்கு ஆகவும், தென்னாட்டில் திராவிட மக்களை அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்தி அவர்கள் என்றென்றும் தலையெடுக்க முடியாதபடி செய்வதற்கு ஆகவுமே யாகும். இந்தக் காரியம்தான் இந்தக்காங்கரசிற்கு இராஜவிஸ்வாசம் இராஜ வாழ்த்து இராஜ ஊழியப் பிரார்த்தனை செய்வது ஆகியவற்றைத் துவக்கத் திட்டமாகக் கொண்டு இருக்கவேண்டியதாயிற்று. இதை அறிந்த முஸ்லிம்களும், திராவிடர்களும் சுமார் 45 வருடங்களுக்கு முன்னதாகவே காங்கரசுக்கு எதிர் கட்சிகட்ட முஸ்லிம் லீக் ஆரம்பித்ததும் அதன் பயனாய் 1905, 6, 7ம் ஆண்டிலேயே வங்காள "அராஜக" "பயங்கர இயக்கம்" பகிஷ்காரம் முதலிய வேஷங்களோடு சுதேசி கலவரம் நடந்ததும், 1916லேயே தென்னாட்டில் திராவிட மக்கள் ஜஸ்டிஸ்கட்சி, பார்ப்பனரல்லாதார் (ஆரியரல்லாதார்) சங்கம் ஏற்பட்டு காங்கரசோடு எதிராட்டம் ஆடி வந்ததுமாகும். இந்த இரு எதிர்ப்புக்குமிடையில்தான் காங்கரசுக்கு சுதந்தரம் வளர வளர போராட்டமும் வளர்ந்துகொண்டே வந்தது என்றாலும் இப்போது சுதந்தரதேவி பரிபூரண உருவோடு உதயமாகிவிட்டாள் என்ற தன்மை இந்திய ஆரியருக்கு ஏற்பட்டவுடன், போராட்டமும் பூரண தன்மையோடு உதயமாகி விட்டது என்றே சொல்லலாம். அதாவது இன்றையச் சுதந்தரத்தின் முதல்வேலை முஸ்லிம்களோடு போராட்டமும், திராவிடர்களோடு கூடிய சீக்கிரத்தில் போராட்டம் துவக்குவதற்குத் தூண்டுகோலான அடக்குமுறையும், அமுத்துவதும்தான் சுதந்திர தேவியின தாண்டவமாக இருந்து வருகிறது. ஆதலால்தான் "மற்ற நாடுகளில் சுதந்தரத்துக்கு ஆக போர்த்திட்டம் வகுப்பார்கள்; ஆனால் நம்நாட்டில் போராட்டத்திற்கு ஆக சுதந்தரத் திட்டம் வகுத்தார்கள். வகுத்ததில் வெற்றி பெற்று போராட்டத்தில் பச்சையாக திரிகரண சுத்தியாக இறங்கிவிட்டார்கள் ஆரியர்கள்" என்று சொன்னோம். இந்தப் போராட்டம் முஸ்லிம்களைப் பொறுத்தவரை ஒரு வெளிப்படையாகப்படை எடுக்கும் யுத்தமாகவே ஏற்பட்டு, இன்று வடநாட்டில் இந்து—முஸ்லிம் போராட்டமென்றும் இந்துஸ்தான் பாகிஸ்தான் போராட்டமென்றும், காஷ்மீர், ஜூனாகட் சமஸ்தானங்களில் போர் என்றும், மற்றும் என்ன என்னவோ பெயர்களைச் சொல்லிக்கொண்டு இப்புறமும் அப்புறமும் இராணுவப் படைகள் சண்டை செய்யவும் "இரண்டு கிராமங்கள் பிடிபட்டன" "எட்டு கிராமங்கள் பிடிபட்டன" "எதிரிகள் முறியடிக்கப்பட்டார்கள்" "அரசரைக் காணவில்லை" "யந்திரப் பீரங்கிப் பிரயோகத்தோடு யுத்தம் மும்முரமாக நடக்கின்றது" என்றும், இப்படியாக "சுதந்தரம் பெற்ற" இந்தியாவில், சுதந்தரப் பிரகடனம் செய்த 60 நாள்களுக்குள்ளாக சுதந்தரதேவி ரத்தவெறி கொண்டு உயிர்ப்பலி வேண்டுகிற யுத்ததேவியாக காட்சியளித்து யுத்தத் தாண்டவம் புரிந்து வருகிறாள்.

இந்த சுதந்தரத்தின் பலனாக இன்று மகா அறிவாளிகள் எல்லாம், "இந்தியாவுக்கு மறுபடியும் ஒரு அன்னிய ஆட்சி தேவை, இல்லாவிட்டால் இந்தியா இஸ்லாம் (முஸ்லிம்) ராஜ்ஜியமாக ஆகிவிடும்" என்கின்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள். இதை இன்று பார்ப்பனர்களே பலபேர் எடுக்

# அடுத்த "குடி அரசு"

★

- பழைய குடி அரசை நினைப்பூட்டும் தோற்றம்!
- பெரியார் அவர்கள் தீட்டும் நாடகம்!
- கைவல்யமவர்களின் கருத்தோவியம்!
- குஞ்சிதமவர்கள் தொடங்கும் பெண்கள் பகுதி!
- இன்னும் பல புதிய பகுதிகளையும் தாங்கி 22-11-47ல் வெளிவரும்.

விலை இரண்டணா. ஒரு ஆண்டுக்கு ரூபாய் ஏழு.

மானேஜர், "குடி அரசு" ஈரோடு.


குரலாகச் சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். வெள்ளையனும் இதற்கு ஒத்து ஊத ஆரம்பித்து விட்டான். அதாவது இந்தியாவுக்கு பிரிட்டிஷ்காரர்களால் அளிக்கப்பட்ட குடியேற்றநாட்டந்தஸ்து என்னும் அதிகாரமாற்ற சுதந்தரமானது எப்படி நடைபெறுகிறது என்பதைப் பார்த்துப் போவதற்குஆக, ஐரோப்பாவில் இருந்து சென்றவாரம் வந்து போன ஒரு ஐரோப்பியர் தம்முடைய கருத்தைப்பத்திரிகை நிருபர்களுக்கு அறிவிப்பதற்குஆக அளித்த பேட்டியில், "இந்துஸ்தான் நிரந்தரமாக அல்லது இன்னும் வெகுநாளைக்கு "பிரிட்டிஷ் காமன் வெல்தில்" இருந்துதான் தீரும். சமீபத்தில், இந்துஸ்தான் பிரிட்டிஷாரின் சம்பந்தத்தில் இருந்து விலகிக்கொள்ள அதற்கு (இந்தியாவுக்கு) முடியாது"

என்று அபிப்பிராயம் கூறி இருக்கிறார். இதுமாத்திரமல்லாமல் பாக்கிஸ்தானைப்பற்றி அந்த வெள்ளையர் அப்படி ஒன்றும் சொல்லவில்லை. ஆகவே, இந்துஸ்தான் சுதந்தரம்பெற்ற 60 நாளைக்குள் சுதந்தரத்துக்கு லாயக்கற்ற தனது தன்மையை, இந்துஸ்தான் காட்டிக்கொண்டு விட்டது என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

1942ம் வருடம் ஆகஸ்டு 8ந்தேதிய "குயிட்டு இண்டியா" (வெள்ளையனே வெளியே போ) தீர்மானத்தின் போதே நாம், "வெள்ளையன் வெளியே போனால் ஜப்பான்காரனை வரவேற்கலாம் என்ற உத்தேசத்துடன் இந்தத் தீர்மானம் செய்திருந்தால், இது ஒரு சிறு அளவுக்காவது புத்திசாலித்தனம் என்று அவர்கள் சொல்லிக் கொள்ளலாம்; அப்படிக்கில்லாமல் வெள்ளையன் வெளியே போவது தாங்கள் (காங்கரஸ்காரர்கள்) ஆட்சி புரிவதற்குஆக என்று கருதி இருப்பார்களானால் அது பெரிய ஏமாற்றமும், மாபெரிய முட்டாள்தனமும் என்பதுமாத்திரமல்லாமல், வெள்ளையன் வீடு போய்ச் சேருவதற்கு முன்பே காங்கரசார் அவனை அழைக்க வேண்டி இருக்கும்" என்று சொன்னோம். இதையே காந்தியாரும் சிலசமயம் சொல்லி அவரது, தீர்க்க தரிசன சக்தியைக் காட்டிக்கொண்டு இருக்கிறார். இப்போது வெள்ளையன் முழுதும் போய்விடவில்லை. சுயராஜ்ய ஒத்திகைதான் பார்க்கிறான். அதாவது காங்கரஸ் பாஷைப்படி, அதிகாரமாற்றம்தான் செய்திருக்கிறான் என்கிறார்கள் சில காங்கரஸ்காரர்கள். இந்த நிலையில் இந்துஸ்தானத்தில் யுத்தம் மூண்டு விட்டது. திராவிடநாடு உளபடப் பல நாடுகளில் அடக்குமுறை, கண்ணீர்ப்புகை, ஊரடங்குச் சட்டம் தாண்டவமாடுகின்றன. அரிசி 8-அவுன்ஸ் (அரை வயிறு) அதுவும் நகரத்தாருக்குமாத்திரம் கிடைக்கிறது. பயிர்செய்த கிராமத்தானுக்கு, கூலிகளுக்கு படி ஒரு ரூபாய் 2 ரூபாய் கொடுத்தாலும் கிடைப்பது கஷ்டம். துணி காந்தீயம். அதாவது அரை நிர்வாணம். கிராமங்களில் ரமணரிஷியம் அதாவது கோவணம் மாத்திரம். இவ்வளவு கேடு மாத்திரமல்லாமல் அதாவது உடை, உணவு இல்லை என்பதல்லாமல் லஞ்சம், அநீதி, பாரபட்சம், கொள்ளை, கொடுமை முதலியவை அளவிட முடியாத அளவுக்குத் தாண்டவம் ஆடுவதுடன், அதிகாரத்துக்கு மகா அவமதிப்பு, கள்ளமார்க்கட்டுக்கு எல்லையற்றுப் போனதுபற்றி கேள்வி கேட்பாடே கிடையாததும், அதிகாரிகள் எப்படிப்பட்டவர்களானாலும் எந்த அந்தஸ்திலிருப்பவர்களானாலும் ஒருவரிடமாவது யோக்கியம், நாணயம், பொறுப்பு, மக்களிடம் அன்பு, தங்களைப் பொதுமக்களின்சேவையாளர்கள் என்று எண்ணுகின்ற தன்மை ஆகியவை அடியோடு காண்பதற்கு இல்லை. பிரிட்டிஷ் 1935ஆம் ஷரத்திய ஆட்சியைவிட, அட்வைசர் ஆட்சியை மகாமகாகேடு என்று கூறினோம். அட்வைசர் ஆட்சியைவிட, காங்கரஸ் ஆட்சி அதாவது ஆகஸ்ட் 15 தேதிக்கு முன்வரையில் இருந்த காங்கரஸ் (பிரகாசம்) ஆட்சியை இது ஒரு வெட்கக்கேடான ஆட்சி என்றோம். ஆகஸ்ட் 15க்குப் பிறகு நடக்கும் சுதந்தர ஆட்சியை, எப்படிப்பட்ட ஆட்சி என்று சொல்ல, இதுவரை உலகில் நடந்து வந்த கேடான கேடான ஆட்சிகளைவிட மிகக் கேடானதாகவும், காட்டுமிராண்டி ஆட்சியாகவும் இருப்பதற்கு ஏற்ற ஒரு பெயர் கண்டு பிடிக்க தமிழ் அகராதியில் வார்த்தையையே காண முடிவதில்லை. வேண்டுமானால் வடமொழி அகராதிப்படி ராமராஜ்ய ஆட்சி என்று சொல்லலாம். அதிலும் அசல் ராமராஜ்யம், அதாவது வால்மீகியின் ராமராஜ்யமென்றே சொல்லலாம். அல்லது மனுதர்ம ராஜ்யம் என்றே சொல்லலாம். அதாவது முஸ்லிம்களை மிலேச்சராகவும், திராவிடர்களை சூத்திரராகவும் கருதி அவர்களை மகா இழிவாய் நடத்தப்படும் மனு ஆட்சி என்றுதான்

சொல்லலாம். ஆனால் இந்த மாதிரி சுயராஜ்ய ஆட்சி மனு காலத்திலோ ராமன் காலத்திலோ நடந்திருந்தால், அது இவ்வளவு கொடுமையாக மக்களுக்குத் தோன்றாது. ஏனெனில் அந்தக்காலத்திய சூத்திரர்கள் (திராவிடர்கள்) தங்களைச்சூத்திரர்கள் இழிமக்கள் என்றே கருதி இருந்து சூத்திரத் தன்மைக்குக் கட்டுப்பட்டுத் தங்கள் செல்வம், பெண்டு, யாவும் பிராமணனுக்கே உரியது, அவனுடைய [illegible], [illegible] துறையிலும் அவன் [illegible] பயன்படுவதுதான் நமக்கு உரியது என்று எண்ணி இருந்த காலம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் இப்போது வெள்ளையன் ஆட்சிக்குப் பிறகு, சுயமரியாதை இயக்கத்துக்குப் பிறகு 'நான் ஏன் சூத்திரன்" என் மனைவி மக்கள் உழைப்பு அவனுக்கு ஏன் பயன்படவேண்டும்" என்ற எண்ணமும் உணர்ச்சியும் தோன்றிய இக்காலத்தில், மனு ஆட்சியோ இராமன் ஆட்சியோ ஏற்படுவது என்றால் தன்னை மனிதன் என்று ஒப்புக்கொண்டு இருக்கிற எவன்தான் சகிக்க முடியும்? எவன்தான் இதை சுயாட்சி, சுதந்தர உதயம், சுயாட்சியின் முதல்படி அல்லது இரு அடிமைத்தன்மையில் இருந்து ஒரு அடிமைத்தன்மைக்கு வந்தோம் என்று சொல்லவோ, கருதவோவாவது முடியும்?

வெள்ளையாகச் சொல்லவேண்டுமானால்,"ஆரியக்கொடுங்கோன்மை வேத சாஸ்திர புராண இதிகாச ஆட்சி" தோன்றி விட்டது. வெள்ளையன் ஆட்சியில் இருந்த சில மனிதத்தன்மையும், எதிர்பார்த்த நம்பிக்கையும் போய் விட்டது என்பதைத் தவிர வேறு ஒன்றும் ஒரு சிறு மாற்றமும் மாறுதல் என்று சொல்ல இடமில்லை.

ஆகஸ்ட் 15ந் தேதி வாக்கில் நாம் ஆகஸ்ட் 15ந் தேதியை துக்கநாள் உதயம் என்று சொன்னது பலருக்கு அதிருப்தியைக் கொடுத்து இருக்கலாம். ஆனால் இந்த 3 மாத (75 நாள்) கால அனுபவத்தில், பிரத்தியட்சத்தில் அதாவது ஒரு வீட்டில் ஒரு இளைஞனுக்குப் பாதுகாப்பும் வளர்ப்பும் அளித்து வந்த அவன் தந்தை இறந்து பிணமாகப்படுத்திருக்கும்போதும், ஒரு இளம் பெண்ணுக்கு அவள் கர்ப்பத்தோடு இருக்கும்போது அவளது அருமைக் காதலன் செத்துப் பிணமாகப்படுத்து இருக்கும்போதும் என்ன மாதிரி துக்கம், துயரம் ஏற்படுமோ அதுபோன்றே, திராவிட மக்களுக்கு ஒரு சகிக்க முடியாத துக்க ஆட்சி உதயம் என்றுதான் சொல்லவேண்டும். இந்தத் துக்கம் தொல்லை பயங்கரக் கொடுமையான ஆட்சி ஒழியவேண்டுமானால் திராவிடர் ஒன்றுகூடி ஆரியர் பிடியிலிருந்து வெளிவந்து உண்மையான முழு சுயேச்சை, முழு ஆதிக்கம் உள்ள திராவிட நாடு ஆட்சி என்னும் (பிரிந்த திராவிட ஆட்சி) சுதந்தரம் கிடைத்தாலொழிய வேறு மார்க்கம் (எந்த வித மார்க்கமும்) இல்லை என்பதே நமது கருத்து.

ஆதலால் 'சுதந்தர உதயத்துக்குத் தீபாவளி கொண்டாடினோம்" என்பது துர்நாற்ற மலத்துக்கும், நல்நாற்ற சாந்துக்கும் பேதமறியா மூக்கர்கள் தன்மையே யாகும்.

---

## அடுத்த இதழ் முதல்

அடுத்தவார முதல் நம் குடி அரசு அதிகமான பக்கங்களுடன் (16பக்கங்கள்) பல புதிய அம்சங்களோடு வெளிவரவிருப்பதை நம் வாசகர்கள் தெரிந்துகொண்டிருக்கலாம். இதனை வரவேற்றுப் பாராட்டி எழுதியிருக்கும் தோழர்களுக்கு நம் நன்றி.

சேர்க்கப்படவிருக்கும் புதிய அம்சங்களில் குறிப்பிடத்தக்கது பெண்கள் பகுதி. பெண்களின் முன்னேற்றம், பெண்கள் கையிலேயே யுள்ளது என்றும் பெண்களுக்காக—பெண்களின் நன்மைக்காக ஆண்கள் பாடுபடுதல் என்பது அர்த்தமற்றது என்றும் நம் குடி அரசு ஆதிமுதல் சொல்லி வந்திருக்கின்றது. குடியரசு—சுயமரியாதை இயக்கம் ஆரம்பமான காலத்தில், அன்னை நாகம்மையாரின் ஆதரவினாலே, மூலையில் பதுங்கிக் கிடந்த திராவிடப் பெண்களைப் புத்துயிர் பெறச்செய்து, பகுத்தறிவுக்கு முரணான பழக்க வழக்கங்களைக் கண்டித்து அறிவுக்கு அரணானவற்றை ஆதரித்துப் பேசவும் எழுதவும் வல்லவர்களாகப் பல பெண்களை அம்பலத்திற்குக் கொண்டுவந்ததையும், வைதீக உலகம் பெண்களா இவ்வாறு பேசுகின்றார்கள்! என்று மூக்கின்மேல் விரல்வைத்து வியப்புற்றுத் திகைப்படைந்ததையும், அதனால் பெண்கள் சமுதாயம் ஓரளவாவது விழிப்படைந்ததையும் நம் தோழர்கள் அனைவரும் அறிவர். இந்த நிலைமையைத் தொடர்ந்து வளர்க்க வேண்டுமென்பதே நம்நோக்கம். இந்த நமது நோக்கத்திற்கு இந்தப் பகுதி உதவி செய்யுமா? இக்கேள்விக்கு விடைகூற வேண்டுவோர் எழுச்சியுடைய திராவிடப் பெண்களேயாவர். இப்பகுதியில் பெண்கள் எழுதியனுப்பும் சீர்திருத்தம் ஊட்டவல்ல கட்டுரைகளுக்கு முதலிடமுண்டு என்று தெரிவிப்பது நம் கடமை.

மற்றொரு அம்சம் நாடகம். சிந்தனைச் சிற்பியாம் பெரியார் அவர்கள் இதனைத் தீட்டுகின்றார்கள். நாடகம், இராமாயண நாடகந்தான். ஆனால் உண்மை இராமாயணம், என்பதை நம் வாசகர்களுக்கு மீண்டும் தெரிவிக்கின்றோம். உண்மை இராமாயணம் என்று கூறுவது வான்மீகி இராமாயணத்தையும் இராமனைக் குறித்துக்கூறும் பிற புராணங்களையும் அலசிக் கண்ட முடிவையே பெரியார் அவர்கள் இப்பகுதியில் எழுதப் போகின்றார்கள் என்பதைத் தோழர்கள் தெரிந்துகொண்டிருக்கலாம். இது நாடக அமைப்பிற்குப் பொருத்தமாக இருக்கின்றதா? அதற்குத் தக்கவாறு வேறு என்னென்ன முறைகளைக் கைக்கொள்ள வேண்டும்? இவைகளைச் சிந்திப்பது நாடக ஆசிரியர்கள்—நடிகர்கள் பொறுப்பு ஆகும். நடிகர்களுக்கும் படிக்கின்ற வாசகர்களுக்கும் கதைத் தொடர்பு கெடாமல், காணப்படும் உண்மைகளை மறைக்காமல், நூற்றுக்கு நூறு முழு உண்மையாகவே தீட்டித் தரவேண்டும்—சுருக்கமாய் இருக்கவேண்டும்—பொய்ம்மை மயக்கத்திலிருந்து மக்கள் விடுதலைபெறவேண்டும் என்பதே

பெரியார் அவர்களின் நோக்கமாகும். இராமனைத் தெய்வமாக, இராமாயணத்தைத் தெய்வீகமாகக் கொண்டாடும் படித்த பாவாணர்களுக்கு இது சிந்தனையாக இருக்கட்டும்! இக்கருத்துகள் தவறானவை என்று கருதினால் ஆதாரபூர்வமாக எழுதட்டும்! அல்லது நமக்கு எழுதியனுப்பட்டும்! எனவும் இந்நேரத்தில் கூறி வைக்கின்றோம்.

பிறிதொன்று கதைப்பகுதி. இப்பகுதி பழங்காலத் தமிழ் மக்களின்—திராவிட மக்களின் வரலாற்றை,—அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிக்கிடக்கும் துண்டு துணுக்குகளை ஆதாரமாகக் கொண்டு கற்பனை தழுவி எழுதுவது; இக்காலத் திராவிட மக்களின் சீர்கெட்ட நிலைமையைப் பலவகைக்கோணங்களிலும் நின்று உணர்ச்சியூட்டுமாறு கற்பனை தழுவி எழுதுவது என்ற இருவகைகளைக் கொண்டதாகும்.

வேறொரு அம்சம் சிறுவர் பகுதி. இப்பகுதியின் பெயரால் சிறுவர்களின் அறிவை வளர்ப்பதற்கு மாறான செயல்களே இப்பொழுது பெரும்பாலும் நடைபெற்று வருகின்றன. இதை மாற்ற வேண்டும் என்பதே நம் நோக்கம். சிறுவர்களின் இயற்கையுணர்ச்சிகள். அவை சூழ்நிலைகளால் பாதிக்கப்படும் வகைகள். திராவிடச் சிறுவர் சிறுமிகளின் மனநிலை, ஆரியச் சிறுவர் சிறுமிகளின் மன நிலை எவ்வெவ்வாறு இருக்கின்றன? அவை சிறிது மாறினால் எவ்வெவ்வாறு இருக்கும்? என்ற சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும் சிறுவர் பகுதி என்பது நம் விருப்பம்

மேலும் மொழி பெயர்ப்பாகப் பிறநாட்டு நல்லறிஞர், புரட்சி வீரர் வாழ்க்கை வரலாறுகளையும், இருபதாம் நூற்றாண்டின் அற்புதங்களான பல புதிய பொருள்களின் விளக்கங்களையும் குறித்து வெளியிட்டு வரவேண்டும் என்பதும் நம் விருப்பம்.

கவிதைகள் இடம் பெற மாட்டாதா? என்று கேட்கின்றார் ஒரு தோழர். திராவிட இனம் விழிப்புறும் வகையில், புரட்சிக் கருத்துகளை யூட்டும் முறையில் எழுதியனுப்பப்படும் ஓசை யின்பம் தரும் கவிதைகளுக்கு இடமுண்டு என்பதையும், கட்டுரையையே (வசனத்தையே) கவிதையாக மாற்றும் அச்சுவித்தைக்கு இடமில்லை என்பதையும் அவருக்குக் கூறுகின்றோம். பாமரர்கள் பேசும் தமிழிலே அப்போதைக்கப்போது நடந்துவரும் நிகழ்ச்சிகளை முறையான கவிதையாக்கி அனுப்புவோரின் கவிதைகள் விரும்பி வரவேற்கப்படும்.

கைவல்யம், சித்திரபுத்திரன் ஆகியோர் தொடர்ந்து எழுதிவருவார்கள் என்பதையும், சுட்டி, ஊர் சுற்றி, பொறுக்கி, தென்னுமணி என்ற பெயர்களில் மறைந்து நிற்கும் புதிய எழுத்தாளர்கள் தொடர்ந்து எழுதி வருவார்கள் என்பதையும், மேற் கூறிய நம் நோக்கங்களுக்கு ஒத்த வகையில் தோழர்களால் எழுதியனுப்பப்படும் கவிதைகளும் கட்டுரைகளும் கதைகளும், கவிதைப்பகுதி கதைப் பகுதி சிறுவர் பகுதி மொழி பெயர்ப்புப் பகுதி ஆகிய பகுதிகளில் அவ்வப்போது இடம் பெறும் என்பதையும், அத்தகைய எழுத்தாளர்கள் மேலும் மேலும் ஊக்கி எழுதி வர ஆதரவு செய்யப்படுவர் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

---

## தீபாவலிக்குத் திராவிடர் பலி?

சென்னை வண்ணாரப் பேட்டையைச் சேர்ந்த ஒரு திராவிடத் தாய், தனது நான்கு குழந்தைகளைத் தன் கையாலேயே கடலில் தள்ளிக் கொன்றுவிட்டுத், தானும் தற்கொலை செய்து கொள்ள முயன்று கடலில் விழ, இப்போது ஆஸ்பத்திரியில் பிரக்ஞையில்லாமல் கிடப்பதாகச் சென்னைத் தினசரிகள் கூறுகின்றன.

தீபாவலிக்குப் புது ஆடைகளும் தின்பண்டங்களும் வாங்கக் கையில் பணமில்லையே என்ற கவலை—தீபாவலிக்கு இவைகளைச் செய்தே ஆகவேண்டுமென்ற மூடநம்பிக்கையின் விளைவு இக்கொலைகளுக்குக் காரணமாகுமென அவைகள் விளக்குகின்றன.

## மதிப்புரை

[மதிப்புரை வேண்டுவோர் இரு பிரதிகள் அனுப்பவேண்டும்]

அழகு
(திங்கள் இதழ்)
மதிப்பாசிரியர்: இராம-மீனாட்சி சுந்தரனார்.
ஆசிரியர்: நா-அறிவழகன்.
தனி இதழ் நான்கணா.
ஆண்டுக்கு மூன்று ரூபாய்.
289, தம்புச்செட்டி தெரு, சென்னை.

முதல் சிலம்பின் 5வது பரல் நம் பார்வைக்கு வந்தது. எடுத்துப் பிரித்ததும் காணப்படும் தமிழ்க் கொடி ஒருவிதத் திகைப்பை உண்டுபண்ணினாலும், உள்ளேயுள்ளகட்டுரைகளும் கதைகளும் நமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றன.

"கலைக் களஞ்சியம்" "ஒழியட்டும் இனாம்கள்" போன்றவை நம் கருத்தையே பிரதிபலித்து அழகு செய்கின்றன. "நக்கீரனார் நாட்டம்" என்ற தலைப்பில் ஆசிரியர் எழுதிவரும் முறை பெரிதும் பயன்தரும் என எண்ணுகின்றோம். ஆராய்ச்சிக் கட்டுரைகளும் அழகை அழகு செய்கின்றன. இதனைத் திராவிடர்கள் பெரிதும் ஆதரிப்பார்கள் என நம்புகின்றோம்.


ரப்பர் ஸ்டாம்புகள்
பலமாதிரிகளில்
குறித்தகாலத்தில்
செய்யப்படும்.
[நாதன் & Co., ஈரோடு.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE.

(2ம் பக்கத்தொடர்ச்சி)

கலையும் அந்தாதி உலாக்கலையும் தற்காலக் கல்விமுறையையொட்டி சிறிய அளவில் பொருள் செலவுசெய்து கற்கின்றார்கள் என்பதும் உண்மையே. ஆனால் அறிவை விளக்கி உண்மையை ஊட்டவல்ல துறைகளைக் கற்பதற்கு ஆங்கிலம் கற்கும் ஆசிரியர்களுக்கு வாய்ப்பிருந்தும்—அந்த வாய்ப்பைப் பலர் பயன்படுத்தி வந்தும் என்ன பிரயோசனம்? பூமி உருண்டை என்று விளக்கும் ஆங்கிலம் கற்ற ஆசிரியரே பூமி, பாய் என்ற கதையை நம்பி விழாக் கொண்டாடுகின்றார். பூமி எவ்வாறு ஏற்பட்டது? எதனால் சுழலுகிறது? என்று விளக்கும் ஆங்கிலம்கற்ற ஆசிரியரே ஆதிசேஷனை நம்புகிறார். சூரிய கிரகணம் சந்திரகிரகணம் ஏன் ஏற்படுகின்றன என்று விளக்கும் ஆங்கிலம் கற்ற ஆசிரியரே அவைகளுக்கு மாறாக வாழ்க்கையில் நடந்து காட்டுகிறார்கள்.

விஞ்ஞானக் கருத்துகளுக்கு முரணான—மாறுபட்ட கருத்துக்களைக்கூறும் புராணங்களைப் படிக்கும் இக்காலத் தமிழாசிரியர்களோ, (தமிழாசிரியர்களிற் பெரும்பாலோர்)புராணங்களின் பொய்ம்மைகளையும், அவைகளுள் ஒன்றுக்கொன்று மாறான பல ஆபாசங்களையும், அவற்றை அடிப்படையாகக் கொண்டு மக்கள் வாழ்ந்து அழியும் ஒழுக்கீனத்தையும் கண்டு அவைகளை ஓரளவு ஒழிக்க வேண்டுமெனக் கவலை செலுத்துகிறார்கள். இந்த இரண்டுவகை ஆசிரியர்களில் யார் மாணவர்களுக்கு அதிகமாகப் பயன்பட முடியும்? கற்கும் கல்வி அறிவுக்கேற்றது. கற்கச் செலவோ அதிகம். ஆனால் வாழ்க்கையில் பயன் படுத்த முடிவதில்லை. கற்கும் கல்வி அறிவுக்கொவ்வாதது. கற்கச் செலவோ அதிகம் இல்லை. ஆனால் வாழ்க்கையில் பயன் படுத்தும் அளவுக்கு முடிகின்றது. இந்த முடிவு ஆங்கிலம் கற்ற ஆசிரியர்கள் அனைவரையும், தமிழ் ஒன்றையே கற்ற ஆசிரியர்கள் அனைவரையும் சேர்த்துக் கூறுகின்ற முடிவல்ல. ஆங்கிலம் கற்ற ஆசிரியர்களிலும், அறிவுக்கு முரணானவைகளைப் போதிக்கும் காலத்தில் விளக்கிச் சொல்வாருமுண்டு; தமிழ் கற்ற ஆசிரியர்களிலும், அறிவுக்கு முரணானவைகளைப் போதிக்கும் காலத்தில் அழகாகச் சித்திரித்து உண்மையென்று கூறுவாருமுண்டு என்பதும் நமக்குத் தெரியும். இதனாலேயே இவ்விருவகை ஆசிரியருக்கும் ஏன் ஏற்றத்தாழ்வு என்று கேட்கின்றோம்? இந்த நிலைமை விரைவில் மாறி, தமிழாசிரியர்களுக்குத் தகுந்த கௌரவம் ஏற்படவேண்டுமென்றும், அதற்கு அரசியலாரின் மன நிலை முதலில் மாறவேண்டுமென்றும் விரும்புகின்றோம்.

அனைவரும் கூடிச் செய்யும் தீர்மானங்களை, அமைச்சருக்கு அனுப்பி வைப்பது. அசையாமலே அமைச்சர் கல்லுப் பிள்ளையாராக இருந்தால் போராட்டத்தில் இறங்குவது. இது தமிழாசிரியர் கழகத்தின் முடிவு. இம்முடிவு வெற்றி தருமா? என்பதைத் தமிழாசிரியர்கள்—திராவிட ஆசிரியர்கள் மீண்டும் ஒரு முறை எண்ணிப்பார்க்க வேண்டுகிறோம். தமிழாசிரியர்கள் நெல்லிக்காய் மூட்டைகளைப் போன்றவர்கள், பிரித்தால் தனித்தனியே ஓடக் கூடியவர்கள் என்ற நிலைமை எவ்வளவு தூரம் மாறி விட்டது? தமிழாசிரியர் என்ற போர்வைக்குள்ளே தமிழைக் கெடுத்து தமிழினத்தை அழிக்க முயலும் ஆரியவிஸமனப்பான்மை யுடையவர்கள் எவ்வளவு தூரம் தமிழாசிரியர் கழகத்திலிருந்து விரட்டப்பட்டிருக்கின்றனர்? தமிழாசிரியர் கழகத்தின் முடிவை எவ்வளவு தூரம் மனம் ஒருமித்துத் தமிழாசிரியர்கள் செய்து வருகின்றனர்? இவைகளைத் தமிழாசிரியர் கழகம் சிந்திக்க வேண்டும். கூட்டங்கள் கூட்டித் தமிழாசிரியர் நிலைமையை—குறைகளைப் பொது மக்களுக்கு அறிவிக்க வேண்டுமென்ற கழகத்தின் முடிவைக்கூடப் பல இடங்களில் தமிழாசிரியர்கள் பின்பற்றவில்லை என்பதையும், தமிழாசிரியர் குறைகளை விளக்கிக்கூறும் பத்திரிகைகள், திராவிடர் கழகப் பத்திரிகைகளைத் தவிர வேறில்லை என்பதையும், போராட்டத்தில் இறங்குமுன் தமிழாசிரியர் கழகம் மீண்டும் ஒரு முறை சிந்திக்க வேண்டுகின்றோம்.

நாம் தமிழாசிரியர் கழகத்திற்குக் கூறும் முதல் யோசனை இதுதான். தமிழாசிரியர் கழகத்தில் முன்னிடம் பெற்று நிற்கும், சேது ஐயங்காரையும் மீனாட்சிசுந்தர தீக்ஷிதரையும் முதலில் கழகத் தலைமையிலிருந்து விரட்டுங்கள். பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் என்ற நிலையில் இவர்கள் இருந்து வருவதைஉணர்ந்து முதலில் இவர்களை ஒழியுங்கள். ஸ்ரீமான் சேது ஐயங்கார் இராமாயணத்திலேயே இவ்வுலகைக் காண்பவர். "தமிழெல்லாம் ஆரியத்தின் இரவல்" என்று, பேசுவதற்கும் எழுதுவதற்குமே தமிழ் ஆராய்ச்சித் தலைவராய் இருந்த வையாபுரி ஐயரின் வார்சுதாரர் இவர் என்பதை அறியுங்கள். இவ்வாறு பேசினால்தான், இளைப்பாற வேண்டிய காலத்திலும் உத்தியோகத்திலிருக்கலாம் என்று, ஆரியத்தின் சுவையை உணர்ந்த வையாபுரி ஐயருக்குப்பின் வந்திருக்கும் சேது ஐயங்காரோ, கட்டாய இந்தியை எதிர்த்து ஆயிரக்கணக்கான தாய்மார்கள் உள்படப் பெரியாரவர்கள் வெஞ்சிறையில் வாடிய போதில், நமக்கு லட்டு வேண்டாமா? ஜிலேபி வேண்டாமா? குலோப்ஜான் வேண்டாமா? வேண்டுமென்றால் இந்தியை எதிர்க்காதீர்கள் என்று அறவுரை கூறி அவ்வறவுரையையும் இராமாயண விரிவுரையையும் தம் முதலாக்கி இன்று ஆராய்ச்சிப் பகுதிக்குத் தலைவராய் இருக்கின்றவர் ஆவர்.

மீனாட்சிசுந்தர தீக்ஷிதரோ, தமிழாசிரியர்களை உண்மையாய் வெறுப்பவர், இந்தி எதிர்ப்புப் போரை எதிர்த்த பல மொழிகற்ற பாவாணர். தமிழாசிரியர்கள் என்று ஒரு பிரிவே இருக்கக்கூடாது என்று எண்ணுகிறவர். தமிழாசிரியர் மாநாட்டில் அக்கருத்தை வலியுறுத்தியவர். திருவையாற்றிலுள்ள ஆரியக் குஞ்சுகள் அபாண்டமாக அலற, அதனுண்மையைக்காண அக்கறையோடு, இலாகா இல்லாத உத்தியோகஸ்தராக திருவையாற்றுக்குச் சென்று துப்பறிந்து வந்தவர். இத்தகைய திருக்கலியாண குணங்களையுடைய இவர்கள் தமிழாசிரியர்கள் நலனுக்குப் பாடுபடுவார்கள் என்று எவ்வாறு தமிழாசிரியர்கள் நம்புகிறார்களோ? நாமறியோம். இத்தகைய புல்லுருவிகளால் தமிழாசிரியர்களின் எதிர்காலம் மிகவும் பாதிக்கப்படும் என்று உண்மையாய் நம்புவதினாலேயே நாம் இதைக்கூறுகின்றோம்.

தமிழாசிரியர்கள் ஒன்றுபடத்தக்க வகையில் இன்னும் அதிகமாக ஆக்க வேலையில் ஈடுபடவேண்டும்! கழகத்தின் எந்தமுடிவையும் தமிழாசிரியர்கள் ஏற்றேயாகவேண்டும் என்ற நிலை ஏற்பட்டபிறகுதான் போராட்டம் வெற்றி பெறும் என்ற நம்பிக்கையைக் கொள்ளுங்கள்! அவசரப்பட்டு வலையில் விழுந்துவிடாதீர்கள்! தமிழாசிரியர்களாய் இருந்து பெற்றுவரும் ஊதியத்தைக் காட்டிலும் வெவ்வேறு துறைகளில் மிகுந்த ஊதியத்தையடையலாம் என்ற உறுதியை—நம்பிக்கையை—யுண்டுபண்ணுங்கள்! இதற்காக உடனே அலுவலை விட்டு அகன்றுவிடத் தூண்டாதீர்கள்! போராட்டம் வெற்றிதருமா என்று சிந்தியுங்கள்! "எண்ணித் துணிக கருமம்" என்பதை நினைவில்கொண்டு போராட்டத்தில் ஈடுபடுங்கள்! என்பதே நாம் அடுத்துக்கூறும் யோசனை.

இந்த நமது யோசனைகள் செயலுக்கு வருமா? பொறுத்திருந்து பார்ப்போம். என்றைக்கும் திராவிடர் கழகத்தின் ஆதரவுமுண்டுஎன்பதை மட்டும், தமிழாசிரியர் கழகம் உறுதியாய் எதிர்பார்க்கலாம் என்பதையும் நாம் இப்போது தெரிவித்துக்கொண்டு, அவர்களின் கோரிக்கை நிறைவேறுவதில் நாம் முழு மகிழ்ச்சியடைகின்றோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.